**செய்தி வெளியீடு எண்: 010** **நாள்: 12.05.2026**

**<u>செய்தி வெளியீடு</u>**

**இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களை விடுவிப்பதற்கும் அவர்களின் மீன்பிடிப் படகுகளை மீட்பதற்கும் தேவையான அனைத்துத் தூதரக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் கடிதம்**

**----**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியை சார்ந்த ஆறு மீனவர்கள் இன்று (12.05.2026) இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள நிகழ்வின் மீது தங்களது கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியை சார்ந்த திருவாளர்கள் அலெக்ஸ், அந்தோணி ராஜன், சந்தான அலோசியஸ், அருள் தே பிரிட்டோ, ஆல்பர்ட் மற்றும் சகாய செல்வசானு ஆகிய ஆறு மீனவர்கள் 10.05.2026 அன்று நாட்டுப்படகில் மீன் பிடிக்க கடலுக்கு சென்றுள்ளனர். அவர்களை சர்வதேச எல்லையை கடந்ததாக தெரிவித்து இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்படையால் ஏற்கனவே 54 மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ளனர். மேலும் 264 படகுகள் இலங்கை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன்.

எனவே இப்பிரச்சனை குறித்து இலங்கை அதிகாரிகளை தொடர்புகொண்டு உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் படகுகளை உடனடியாக மீட்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**<u>Text of the D.O. Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru C. Joseph Vijay addressed to the Hon'ble Union Minister of External Affairs Dr. S. Jaishankar to utilize all available diplomatic channels to secure the early release and safe repatriation of all detained fishermen and their fishing boats</u>**

I wish to draw your attention to the arrest of six fishermen belonging to Mandapam in Ramanathapuram District by the Sri Lankan Navy today (12.05.2026).

The fishermen ventured for fishing on 10.05.2026 from Mandapam in Ramanathapuram District and were arrested along with their fishing boat for allegedly crossing IMBL. The six fishermen are Tvl.Alex, Anthoni Rajan, Santhana Alocias, Arul They Britto, Albert and Sahaya Selvashanu.

It is also brought to notice that, 54 fishermen are already in Sri Lankan Prison and 264 boats have been impounded by the Sri Lankan authorities.

In this regard, I request you to take up the matter with the Sri Lankan Authorities through appropriate diplomatic channels to secure the release of the detained fishermen and their Boats at the earliest.

••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu